

யாழ்ப்பாணம், சில்லாலையைப் பிறப்பிடமாகவும்,
இல.660 1/3, ஜெயந்திநகர், கிளிநொச்சியை நிரந்தர
வசிப்பிடமாகவும் கொண்ட

**சமாதான நீதவான் (JP)**

# அமரர்

# சண்முகம் சந்திரசேகரம் (சந்திரன்)


அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# சந்திரோதயம்

07.11.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம், சில்லாலையைப் பிறப்பிடமாகவும், இல - 680 1/3, ஜெயந்திநகர், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சமாதான நீதவான் (JP)

அமரர்

# சண்முகம் சந்திரசேகரம் (சந்திரன்)

அவர்களின் "விண்ணக வாழ்வெய்திய" 31ஆம் நாள்

## "சந்திரோதயம்"

## 07.11.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்
குலவிளக்காய் இருந்து
எம் நல்வாழ்விற்கும், வளர்ச்சிக்கும்,
உயர்ச்சிக்கும் அயராது பாடுபட்டு,
எமக்கு நேரிய வழிகாட்டி, நிகரிலாக்
கண்டிப்புடன் அன்பை ஊட்டி
ஊரும் உலகமும் போற்றிப்
புகழ்ந்திட உறுதி தளராது
உழைத்து, நாளெல்லாம்
நிழலாய் நின்று தாங்கிய தந்தையே!
உமக்கே இந்நூல் சமர்ப்பணம்

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனம் மகிழ

11

11

1952



மனம் நெகிழ

08

10

2021

# அமரர்

# சண்முகம் சந்திரசேகரம் (சந்திரன்) J.P

அவர்களின்

## "திதி நிர்ணய வெண்பா"

பிலவ வருடம் ஐப்பசித்திங்கள் எட்டாம் நாள்
பூர்வபட்ச துதியைத் திதியன்று வெள்ளிக்கிழமை
எங்கள் குலதெய்வம் சண்முகம் சந்திரசேகரம்
இவ்வுலக வாழ்வை [illegible]து ஈசன் இறையடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப்
பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்
பாடியும் வழிபடும் அதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## பட்டினத்தார் பாடல்

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு
பிடி சாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாம் உய்யவேண்டும் என்றே அறிவாரில்லையே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ! மலிவளஞ் சுரக்க! மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக! உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞான சம்பந்தர் அருளிய திருவெழுக் கூற்றிருக்கை

*பதிக வரலாறு:*

திருஞான சம்பந்தப் பெருமானது தந்தையார் சிவபாத விருதையர் தமது பூசைக்காலத்தில் தினமும் வேதங்கள் திருப்பதிகங்கள் ஓதும் முறைமை உடையவராய் இருந்தார். நாளும் பதிகங்கள் பெருகிகொண்டே வந்ததால் சிவபாத விருதையர் முற்றும் ஓத முடியாது மனவருத்தம் அடைந்தார். இதை அறிந்த சம்பந்தப்பெருமான் **"திருவெழுக்கூற்றிருக்கை"** என்னும் பதிகத்தை தந்தையார்க்கு அருளி இதனை ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பலன் கிடைக்கும் என்றும் கூறி அருளினார். எனவே இப் பதிகத்தை ஓதினால் தமிழ் வேதத்தையே ஒரு முறை ஓதிய பலன் நிச்சயம் கிடைக்கும். அளவில்லா புண்ணியம் பெறலாம். இப் பதிகத்தை ஓதும் வீடும் துய்யமடையும்.

ஓர் உரு ஆயினை மானங் காரத்து
ஈரியல் பாய், ஒரு விண் முதல் பூதலம்
ஒன்றிய இரு சுடர் உம்பர்கள் பிறவும்
படைத்து, அளித்து, அழிப்ப, மும்மூர்த்திகள் ஆயின
இருவரொடு ஒருவன் ஆகி நின்றனை
ஓர் ஆல் நிழல், ஒண் கழல் இரண்டும்
முப்பொழுது ஏநதிய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இரு நதி அரவமொடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈர் அயில் மூவிலைச் சூலம்,
நாறகால் மான்மறி, ஐந்தலை அரவம்,
ஏந்தினை காய்ந்த நால் வாய் மும்மலத்து
இரு கோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
ஒரு தனு இருகால் வளைய வாங்கி,
முப்புரத்தோடு நானிலம் அஞ்ச,
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புலன், நால் ஆம் அந்தக்கரணம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்குணம், இருவளி, ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தொடு,
இரு பிறப்பு ஒர்ந்து, முப்பொழுது குறை முடித்து,
நால்மறை ஓதி, ஐவகை வேள்வி
அமைத்து, ஆறங்க முதல் எழுத்து ஓதி,
வரன் முறை பயின்று, எழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலி அமைததுணர் புகலி அமர்ந்தனை
பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய, மேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்தத பூந்தராய் ஏய்ந்தனை
வர புரம் ஒன்று உணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறலரக்கன்
விறல் கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன், நான்முகன், அறியா
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழ் இசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும், ஐந்து அமர் கல்வியும்,
மறை முதல் நான்கும்,
மூன்று காலமும், தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும், ஒருமையின் பெருமையும்,
மறு இலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும
அனைய தன்மையை ஆதலின், நின்னை
நினைய வல்லவர் இல்லை, நீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சண்முகம் சந்திரசேகரம் ( JP )
# [சந்திரன்]
## அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்



"இந்து சமுத்திரத்தின் முத்து" எனப்படும் இலங்கையின் சிகரம் எனச் சிறந்தோங்கும் யாழ்/சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் சின்னப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனாக 1952.11.11 திகதி இப்பூவுலகில் அவதரித்தார். இவருக்கு தம்பியாக சிவலிங்கம் (குணம்) தங்கைகளாக சந்திரமலர், இந்திராணி, சாந்தகுமாரி, பத்மினி, மோகனா உள்ளனர்.

இவர் தனது ஆரம்பக்கல்வி தொடக்கம் கல்விப் பொதுச் சாதாரண தரம் வரை கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் பயின்றார். குடும்பச் சூழ்நிலைகாரணமாக உயர்கல்வியைத் தொடர முடியவில்லை. **"உழவுத் தொழிலாளனே உலகத்தின் அச்சாணி"** என விவசாயத்தையும், வியாபாரத்தையும் தனது தொழிலாகக கொண்டு பலருக்கு தொழில் வழிகாட்டியாகவும் இருந்தார். 1982.07.26 அன்று தந்தை இறந்ததும் குடும்பப் பொறுப்பு முழுவதும் இவரையே சார்ந்து இருந்தது. இவர் குடும்பத்தைத் தலைமை தாங்கி சிறப்பாக நடாத்தி வந்தார். இவர் தம்பி தங்கையின் திருமணப்பருவம் வந்ததும் திருமணம் முடித்து வைத்தார். இவர் தனது திருமணத்தைப் பின் தள்ளியே வந்தார்.

இருந்தாலும் தாயின் விருப்பத்திற்காகவும், உடன் பிறந்தோரின் வற்புறுத்தலினாலும் தனது 35ஆவது வயதில் யாழ்ப்பாணத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த சொக்கலிங்கம் இராசம்மா இணையரின் 09ஆவது மகளும் திருநாவுக்கரசு, துரைஐயா, மனோன்மணி, கமலாதேவி, சறோஜினிதேவி, பாலாம்பிகை, நாகேஸ்வரி, சகுந்தலாதேவி, பூமணி, நவசோதி, றஞ்சிதமலர் ஆகியோரின் சகோதரியுமான மகேஸ்வரி (தேவி) என்பவரை 1987.03.29 இல் திருமணம் செய்து கொண்டார். இவர்களின் இல்லற வாழ்வின் பெறுபேறாய் இவர்களிற்கு மூத்த குழந்தையாக உஷாயினி 1988.03.23 இல் பிறந்தார். இவரைத் தொடர்ந்து சயந்தன் 1989.04.07இல் பிறந்தார். இவருக்கு அடுத்ததாக கிருஷாந்தன்1993.06.24, தர்சிகா 1995.02.01, சுகிர்தரனும் 1996.04.10 பிறந்தார்கள். இவர்களை அன்புடனும், பண்புடனும் அறிவூட்டி நல்வழிப்படுத்தி கண்டிப்புடனும், கண்ணினை இமை காப்பது போலவும் வளர்த்தார்.

1996இல் ஏற்பட்ட இலங்கையின் போர்ச்சூழல் காரணமாக கிளிநொச்சியில் இருந்து குடும்பத்துடன் ஸ்கந்தபுரத்திற்கு இடம் பெயர்ந்து மீண்டும் 2001இல் கிளிநொச்சியில் குடியேறினார். இத்தகைய சூழ்நிலையிலும் இவர் தனது பிள்ளைகளின் கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்து கற்பித்து மகிழ்வுடன் வாழ்ந்து வந்ததுடன் பிள்ளைகளது வாழ்வு இப்புவிதனில் சிறந்திடவே அல்லும், பகலும் அயராது பாடுபட்டதோடு பிள்ளைகள் ஐவரும் சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கு வழிசமைத்தார். இவர் தனது ஐந்து பிள்ளைகளையும் உயர்தரம் வரை கற்பித்து இருமகள்மாரையும் கல்வியியற் கல்லூரிவரை பயிலவைத்து ஆசிரியர்களாக்கியும், முதலாவது மகனை வெளிநாட்டிற்கும் இரண்டாவது மகனை இலத்திரனியல் தொழில்நுட்பவியளராக்கவும் தனது இளைய மகனை AIA நிறுவனத்தின் Wealth Plan Manager ஆகவும் அவர்கள் அனைவரும் தமது வெற்றிப் பாதையை நோக்கிச் செல்ல வழி அமைத்துக் கொடுத்தார்.

அத்தோடு மக்களின் மணப்பருவம் கண்டு மூத்தமகள் உஷாயினியை 2017.09.15 அன்று கம்பளையைச் சேர்ந்த சம்பத்லக்றுவன் என்பவருக்கு கோலாகலமாக திருமணம் செய்து வைத்து அவர்களுக்கு புதல்வியாக 2018.06.28 அன்று ஜெனிலி பூஜா பிறந்தார். பின் 2020.07.02 அன்று மூன்றாவது பிள்ளையான கிருசாந்தனை ஜெயந்திநகரைச் சேர்ந்த கீர்த்தனாவிற்கு பதிவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து வைத்தார். மேலும் உற்றார் உறவினர்க்கு இல்லையெனாமல் உதவி புரிவதில் சிறந்து விளங்கியதோடு அநாதைக் குழந்தைகளிற்கு உதவி செய்வதையும் மன விருப்புடன் மேற்கொண்டார்.

இவருடைய பொதுப்பணியினாலே சமாதான நீதவானாய் 2017.11.07 மக்களே தெரிவு செய்ததால் அரசு அங்கிகாரம் கொடுத்தது. இவர் சமாதான நீதவானாக மட்டுமன்றி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம், கிளி.கால்நடை வளப்போர் கூட்டுறவுச் சங்கம் கிளி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஜெயந்திநகர் தெற்கு சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் போன்றவற்றின் தலைவராகவும், R.D.S, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உபதலைவராகவும், ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகராகவும் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் உபதலைவராகவும் கிளிநொச்சிமாவட்ட கூட்டுறவுச் சபையின் முன்னாள் உறுப்பினராகவும், 2011.02.10 சிவில் பாதுகாப்பு அமைப்பு சமூக காவல்துறைப் பிரிவின் தலைவராக, மற்றும் வே. கதிரவேலு அப்புஜீ ஞாபகார்த்த கல்வி அறக்கட்டளை உறுப்பினர் என பல்வேறு பதவிகளில் இருந்து சமூகத்திற்கான பணியைத் திறம்படச் செய்து பல விருதுகளையும் தன் வசப்படுத்திக் கொண்ட பெருமைக்குரியவர்.

இதற்கு உதாரணமாக 1992.05.23 "ஜெயந்திநகர் கிராம நலன் சேவகர் விருது" பெற்றமையைக் குறிப்பிடலாம். மேலும் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இன்று வரை தன்னை ஒரு சிறந்த கூட்டுறவாளனாக வெளிப்படுத்தி நின்றவர். இதற்குச் சான்றாக 95வது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில் 2017 இற்கான சிறந்த "கூட்டுறவாளர் விருது" மற்றும் 2019.03.10 97வது சர்வதேச கூட்டுறவுத் தினத்தில் சிறந்த "முதன்மைக் கூட்டுறவாளர்" என்ற விருதைப் பெற்றமையும் குறிப்பிட முடியும். அத்துடன் ஜெயந்தி நகர் பொது அமைப்புக்களில் பிரதிநிதியாக சேவையாற்றியதற்காக 2020இல் சேவை நலன் பாராட்டு விழாவில் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குடும்பத்தினருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனது மதிக்க முடியாத உடைமைகளில் மிகச் சிறந்தது அவனது வாழ்வு தன் சொந்த நலனுக்கு அப்பால் தன் மண்ணையும், மக்களையும் நேசிக்கும் ஒருவன் வாழும் சமூகம் அவன் மூலம் உச்ச பலன்களைப் பெறுகிறது. அவ்வகையில் சந்திரசேகரம் அவர்களின் ஒப்பற்ற சேவை எம் மக்களின் மேம்பாட்டில் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளது என்பதை எவராலும் மறுத்து விட முடியாது. "**மக்கள் சேவையே மகேசன் சேவை**" என வாழ்ந்தவர். எடுத்த காரியம் யாவிலும் அயராது அர்ப்பணித்து சமூகப்பணியே தனது சேவையாகக் கொண்டவர். இவற்றைத் தவிரவும் பொதுத் தொண்டுகளில் தன்னை ஈடுபடுத்தி ஊரின் பொது அமைப்புக்களுக்கு தலைமை தாங்கி வழிநடத்தினார். தன்னையே முழுமையாய் மக்கள் தொண்டிற்காக ஈகையாக்கிய உண்மையின் உறைவிடமானவர்.

"**யாருக்காகவும் உன்னை மாற்றிக் கொள்ளாதே: ஒரு வேளை மாற நினைத்தால் ஒவ்வொரு மனிதர்களுக்கும் நீ மாற வேண்டி வரும்**" என அடிக்கடி கூறுவார். தனது வாழ் நாள் முழுவதும் தான் கொண்ட கொள்கையுடனேயே வாழ்ந்து நடுநிலையில் நின்று தளம்பாது செயலாற்றி, வினைத்திறன் மிக்க ஒருவராக நீதி நேர்மை மிக்க மனிதப் பண்புகளோடு நடந்தவர். தன்னம்பிக்கையும் தளர்வில்லாத ஊக்கமும் கொண்ட இவர் மற்றவர்கள் மனம் நோகும் வண்ணம் நடந்தறியாதவர் இத்தகைய பண்பாளருக்கு காதில் வந்த திடீர் நோயால் உடல் நலம் பாதிக்கப்பட்டு 2021.08.10 அன்று யாரும் எதிர்பாராத வண்ணம் இறையின்பம் நாடி இறைவனடி சேர்ந்தார்.

"**நம் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம், ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்**" என வாழ்ந்த உத்தமர்!

"**வாழ்க அவர் பெயர்! வளர்க அவர் சிந்தனைகள்!**"

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் உள்ளத்திலிருந்து.....!

கடவுள் தந்த உயிர் என்று சொல்லவா
இல்லை கடவுளிலும் உயர்வென்று சொல்லவா?
நிகரில்லா என் சுவாசம் நீங்களே - என்
மனம் தினம் தினம் ஏங்கும் அன்புத் துணையே!

என் வாழ்வின் விளக்கே !
தேவி தேவி என்று அழைக்கும் தெய்வமே!
சந்திரன் என்ற சொல்லை
இனிக் கேட்காதபடி நிறுத்தியது ஏனோ?

என் தேசத்து சூரியன் நீங்கள்!
உங்கள் காலடியில தவழ்ந்த வரை
எந்த இருளும் என்னை அணுகியதில்லை
பார்வையால் மட்டும் பதில் பேசும் - உங்கள் சுபாவம்

கோபக்காரன என்றாலும் கூட
தக்க தருணத்தில் செய்ய வேண்டிய
கடமைகள் அனைத்தையும்
உரிய காலத்தில் நிறைவேற்றினீர்களே!

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
அல்லும் பகலும் நீங்கள் ஒளிர்ந்தீர்கள்
உங்கள் நிழல் கூட எமை மிதிக்காமல்
கண் விழித்துப் பார்த்துக் கொண்டீர்கள்

கரம் பிடித்த நாள் முதலாய்
தனித்து நான் வாழ்ந்ததில்லை
இனிவரும் காலமெல்லாம்
தனிமை தான் வாழ்க்கையன்றோ!

அன்பு மனைவி
மகேஸ்வரி (தேவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் றும் டும்பத்தின



மனைவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மூத்த அன்பிற்குரிய புத்திரனே!

இறைவா! என் கருவறைதனில்
முதலாவது முத்தொன்றைப் பெற்றேனே!
ஆசை மகனை அள்ளித் தூக்கியதும்
ஆனந்த மனம் துள்ளியதே!

வானிலே சந்திரனாய் ஒளி வீசுகின்ற சந்திரனை
என் கருவறைதனில் சுமந்தேனே
நான் என்ன தவம் செய்தேனோ தெரியவில்லை
உன்னைப் போல் ஒரு உத்தமனைப் பெற்றெடுத்ததற்கு..!

காரிருள் சூழ்ந்த இடத்தில் நீ வந்து நிற்கையில்
உனது கம்பீர தோற்றத்தைக் கண்டு காரிருள்
பயந்தோடுமே... ஆனால் நீ இல்லாத
சில நாட்களாக என்னை காரிருள் சூழ்ந்து
நிற்கின்றது மகனே!

அன்பால் அரவணைத்து அறிவால் அமுதூட்டி
ஆசையாய் வளர்த்த மகனே சந்திரா!
அன்னையை அழவைப்பவன் அன்பற்றவன் என்றாய்
நான் கதறி அழுதும் என் கண்ணீரைக் களைய வரவில்லையே!

அம்மா அம்மா என நீ அன்பாய் அழைப்பதனை
இனி நான் அகமகிழ்வுடன் கேட்க முடியுமா?
என்னைத் தனியாய்த் தவிக்க விட்டுச் சென்றாயே!
இனி மகனே என்று உனை மனதார அழைக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் கொடுத்த தாயின் கண்பார்வை குறைவென தவித்து
என் பார்வைக்கு ஒளி கொடுத்த கனிவான மகனே!
இவ்வாறு உன்னைக் காணவா
மீண்டும் பார்வை பெற்றேன்?

இப்படியொரு மகனைப் பெற்ற தாய் - என்று
ஊரார் பாராட்டும் வண்ணம்
என் பெருமையையும் மதிப்பையும்
என்றும் உயர்த்தியவனே!

எனக்கு கடமை செய்வாய் என எண்ணியிருந்தேன்
உன் கடமையைக் காணும் துர்ப்பாக்கிய நிலையினைத்
தந்துவிட்டாயே!
சின்னப் பிள்ளையின் பெரிய பிள்ளையே !
உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்

- அன்புத் தாய் -

கடவுளுக்கும் அப்பாவிற்கும் - சிறு
வேறுபாடு தான் கண்ணுக்கு
தெரியாதவர் கடவுள்
கண்ணுக்குத் தெரிந்தும் பலராலும்
கடவுள் என புரிந்து
கொள்ளப்படாதவர் "அப்பா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூத்த மகளிடமிருந்து .....!

கடவுள் கொடுத்த வரம் கிடைக்கவில்லை - எனக்கு
கடவுளே வரமாகக் கிடைத்தார் - அப்பா
உலகிலேயே அதிகம் பிடித்த உறவை
இப்போது உணர்வுகளில் மட்டும் தான் உணரமுடிகிறது
என் நிழலை இப்போது நினைவுகளில் மட்டுமே காணமுடிகிறது.

என்ன தான் நீங்கள் செய்து தரவில்லை?
ஒரு அப்பாவாக என்ன செய்ய முடியுமோ
அதையெல்லாம் செய்திருக்கிறீர்கள்
அன்பு காட்டி அரவணைத்திருக்கிறீர்கள்

தேர் போலத்திரிந்த அந்த நடையை
எங்கள் முற்றம் இழந்து தவிக்கிறது
அப்பா உங்கள் தொலைபேசியில் இருந்து
இனி அழைப்பு வரப்போவதில்லை
அழகான உங்கள் செந்தளிப்போடு
எங்கள் வாசல் எவரையும்
வரவேற்கப் போவதில்லை

நீங்கள் இல்லை என்ற உண்மையை
நம்ப முடியவில்லை அப்பா!
அழகான என் வாழ்க்கை இருளாகி
விட்டதையும் தாங்க முடியவில்லை அப்பா!

அன்பு மகள்
உஷாயினி (உஷா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா என்னும் முதற் தெய்வம் .....!

அப்பா என்னும் ஓர் உருவம் - எங்கள்
ஆயுள் முழுவதும் வரும் தெய்வம்
ஆகாயத்தின் எல்லை வரை எங்களை
ஏற்றி வைத்த முதல் தெய்வமே!

கருவறை தந்தது தாய் என்றாலும்
உயிரைத் தந்தது நீங்களல்லவோ!
மண்ணைக் காப்பது மழையென்றாலும்
எங்களைக் காப்பது நீங்களல்லவோ!

உயிருக்குள் எங்களை வைத்து உணர்வுக்குள்
எங்களை சுமந்து வளர்த்திட்ட முதல் தோழனே!
எங்கள் பெயரோ! எம் தாய் பெயரோ!
முதலெழுத்தானவர் நீங்களல்லவோ!

ஒரு வேளையாவது உங்களைத் தூக்கி
சுமந்திருந்தால் உள்ளம் ஆறி இருக்குமே தந்தையே!
எங்கள் துணை நீங்கள் தானே!
எமை விட்டு போனதேனோ?

அன்பை வார்த்தையில் சொல்லாமல்
வாழ்க்கையின் மூலம்
வெளிக்காட்டும்
ஓரே ஜீவன் அப்பா!

எத்தனை பேர் நான் இருக்கின்றேன்
என்று சொன்னாலும்
நம் அப்பாவைப் போல
யார் இருக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும்
வைத்திருக்கும்
ஒரே உறவு அப்பா!

மறைந்து போனாலும் என்றும்
மறைந்து போகாத அன்பைக்
காட்டிச் சென்றவர் அப்பா!

ஓய்வெடுக்கும் காலத்தில் காலம் இருந்தும்
காலன் அழைத்தது புரியவில்லை - அப்பா
கொடிய காலன் நல்லவர்களை
கானகாலம் விடுவதில்லை என்பது உண்மை தந்தையே!

உங்கள் வாழ்வில் அது
பொய்யாகும் என்று
நம்பியிருந்தேன் தந்தையே!
இறுதியில் பொய்யாகிப் போய் விட்டதே

என் உயிர்த் தந்தையே!
இனியொரு பிறப்பொன்று இருந்தால்
உங்களுக்கே மகனாகப் பிறக்க
ஆசைப்படுகின்றேன் தந்தையே!

அன்பு மூத்த மகன்
சயந்தன் (சயந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி உலகு காணுமா? எம் அப்பாவைப் போல் .....!

அறியா வயதிலிருந்து இன்று வரை
அருகிலிருந்து என்னை ஆற்றுப்படுத்தும் - அப்பா
அகிலத்தில் என்னை அறிமுகப்படுத்தி
ஆளாக்கியவர் என் தந்தை
மின்னல் போல் ஒரு நொடிக்குள்
இருள் வீழ்ந்து போனதென்ன!

வார்த்தைகளில் எதைக் கூறுவேன் - தந்தையே!
உங்கள் முகத்தை இறுதியாகப் பார்க்காத
துயரத்தைக் கூறி ஆற்றுவேனா?
அல்லது நீங்கள் உயிரோடு இருந்த போது
செய்தவற்றைக் கூறுவேனா?

காலக் கொடுமைக்குள் நோயுற்று - உம்மை வருத்திய
நோயின் வலியை அறியவில்லையே - நான்
வலியை உங்களுக்குள்ளே மறைத்து
எம் முன்னே புன்முறுவலோடு உலாவந்தீர்கள்
காலன் கருணை இன்றி
பறித்து விட்டானே அப்பாவை

எதற்கெடுத்தாலும் நீங்கள் தானே
முன்மாதிரியாக விளங்குவீர்கள்
இனி.. அப்பா என்று அழைக்க மனம் வருந்துகின்றதே!
பிள்ளைகளுக்காகவே உமது உடலை மெழுகுவர்த்தியாக்கினீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் வாழவேண்டும்
பிள்ளைகளை இப்படித்தான் வளர்க்க வேண்டும்
என எத்தனை அறிவுரைகள் வழங்குவீர்களே!
எல்லோருமே உமது கூண்டுக்குள் இருந்ததினால்
உங்களது இழப்பை ஏற்க மனம் மறுக்கின்றதே!

என் செய்தேன் அப்பா நான்
உங்களைப்பார்க்க முடியாத பாவி நான்
தாங்கமுடியவில்லை தவிக்கின்றேன - என் துடிப்பு
அறிந்ததால் துயர் கொள்ளுமே உங்கள் உள்ளம்
உங்கள் தலையில் ஏற்பட்ட வலியை எண்ணி
தவிக்கின்றேன் நித்தம் நித்தம் - தற்போது

உங்கள் ஓர் பார்வையிலே
என் பிழைகளைச் சுட்டிக்காட்டுவீர்கள்
இன்று என் தவறுகளை
சுட்டிக் காட்ட - இல்லாமல் எங்கு சென்றீர்கள்?

எம்மைத் தெரியாதவர்களுக்கும் - உங்கள்
பெயர் சொன்னால் புரிந்து விடும்
என் அப்பா தான் நீங்களென்று
வஞ்சகம் செய்தல் வசைபாடுதல் எதுவுமின்றி
மக்கள் மனதைத் கவர்ந்த என் அப்பா
விண்ணுலகம் சென்றது ஏனோ!

செல்ல மகன்
கிருசாந்தன் (கிரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுயிர்த் தந்தையே .....!

முந்தித் தவமிருந்து முந்நூறு நாட்
சுமக்காது காலமுள்ளவரை - எமை
மனதிலே சுமந்த உன்னத
தெய்வம் என் அப்பா!

அரவணைப்பில் அன்னையாய்
கண்டிப்பதில் தந்தையாய்
வழிகாட்டுவதில் ஆசானாய் - எமை
வழிகாட்டிய குடும்பத்தின் ஒளி விளக்கே!
உங்களைப் பிரிந்து வாடிவிடும் எமக்கு
ஆறுதல் சொல்ல யாருமில்லை - உமைத்தவிர

தமிழர் தன் பண்பாட்டினையும்
நேரிய சிந்தனையையும் நாங்கள் கற்றது
உங்களிடத்தில் "அப்பா"
நிழல் தரும் பெருவிருட்சமாய் இருந்து
விழுதுகளாய் எமைத்தாங்கி நின்றீர்களே!
விருட்சம் இன்றி விழுது எப்படி வாழும் - அப்பா
என்னிடமே வந்திடுங்கள் மீண்டும் வந்திடுங்களப்பா...!

மூச்சுக்கு முந்நூறு தடவை தர்சி தர்சி
என்று அழைப்பீர்களே அப்பா!
ஒரு பொழுதேனும் எமை விட்டுப்
பிரிந்திருக்க கஸ்டம் என்பீர்கள்
எவ்வாறு எமை விட்டுப் பிரிந்து சென்றீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வாழ்க்கையில் - நான்
அடைந்த வெற்றிக்குள் அடங்கி நிற்கிறது
என் தந்தை நீங்கள் ..... எனக்காக
செய்த தியாகங்கள் பட்ட கஸ்டங்கள்......
என்னால் தாங்க முடியவில்லை அப்பா!

இன்றும் நீங்கள் எம்மோடு இருப்பதாகவே
நாம் உணர்கின்றோம்
உருவம் போனாலும் உங்கள் - அருவம்
எம்மோடு என்றுமிருக்க வேண்டும்
முன்பு போல் உங்கள் அன்பும்' அக்கறையும்
பாசமும் பாதுகாப்பும் கண்டிப்பும்
கொண்டு என்னை வழிகாட்டிட
என்றென்றும் என்னோடு
நீங்கள் வேண்டும் அப்பா!

அப்பா நான் திரும்பப் பெற நினைப்பது
உங்களுடன் வாழ்ந்த நாட்களை அல்ல
உங்களையே அப்பா!

செல்ல மகள்
தர்சிகா (தர்சி)

**பலரது வாழ்வில் கடைசிவரை**
**விளங்கிக் கொள்ள முடியாத**
**புத்தகம் அப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசி மகனின் இதயத்திலிருந்து .....!

எங்கள் குடும்பத்தின் ஆணி வேரே!
கண்மூடி முழிக்கும் முன்னே - எம்மைக்
கடந்து விட்டீர்களே அப்பா
என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர்கள்
என எண்ணிலாக் கனவுகன் கண்டிருந்தோம்
ஏன் அப்பா மறைந்து விட்டீர்கள்?

சிறு வயது முதல் நாங்கள் ஐவரும்
செய்த தவறுகளை மன்னித்து
நெறிப்படுத்திய தந்தையே!
உங்கள் இளமைக்காலம் முதல் ஓய்வெடுக்காது
கடினமா உழைத்தீரே!

நீங்கள் திட்டி நான் அழுததில்லை
நீங்கள் அடித்தும் எனக்கும் வலித்ததில்லை
என்னருகில் நீங்கள் இருந்த போதும் - உங்களருகில்
நான் இருந்த போதும் நான் பலசாலியானேன்.

மூக்கில் வாயில் இரத்தம் வந்த போது
களத்தினிலே நின்ற நாம் கதிகலங்கினோம்
காரில் உம்மை ஏற்றி வேகமாக வைத்தியசாலை
சென்று உம்மைக் காப்பாற்றி விடலாமென!

கடைசிவரை நின்றோம் காத்திட- உங்களை
கனவில் கூட நினைக்கவில்லை
ஏமாறப போவதை நாம்...!
காலத்தின் நேரமதோ!
காலன் அவன் வேலையதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடம் விட்ட போது
தோளில் எனைச் சுமந்தீரே அன்று
கொள்ளிக்குடம் தோளில் நான்
சுமந்திட்ட நேரத்தில் இன்று
வேதனையாய் இருக்குதப்பா
வேகும் உடல் பார்த்த போது
சொல்லி ஆற முடியவில்லை
உங்கள் உடலில் தீ வைத்த போது!

துன்பங்கள் இன்பங்கள் வரும் வாழ்க்கையிலே
அன்னை தந்தை உறவுகளை நாடி நிற்கும் பிள்ளை நான்
உன்முகம் பாராமல் தினம்
நொந்து நிற்கிறேன் பிள்ளையாய் நான்!

கடைக்குட்டி மகன்
சுகிர்தரன் (சுகிர்)

**உண்மையில் உழைத்து சொந்தக்**
**காலில் நிற்கும் பொழுது தான்**
**புரிகிறது இத்தனை நாள் – தான்தோளில்**
**சுமப்பதற்கு எவ்வளவு வலிகளை**
**கடந்திருப்பார் "அப்பா" என்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா எங்கு சென்றீரோ .....!

வேட்டி அணியும் நிறைந்த மனிதருக்குள்
நீங்களும் ஒருவர்
வெள்ளை என்பது உங்களின் அடையாளம்
வெண்மை என்பதே உங்களின் அழகாகும்

எல்லோரையும் நேசித்தீர்கள்
எல்லோராலும் நேசிக்கப்பட்டீர்கள்
இளைஞர்கள் பலருக்கு - இன்றும்
முன்மாதிரியாய் இருப்பது நீங்கள் தான்

மாமா என்றழைக்க எனக்கு முறையாய்
வாய்த்தவர் நீங்கள்
இன்று அணைக்க முடியாத துயரத் தீ
மனதுக்குள் எரிய எங்கு உள்ளீர்கள்?

பேச நிறைய உண்டு
போனவரோ மீளவில்லை
வாசல் திறந்து வைத்தும் உங்கள்
வழித்தடத்தைக் காணவில்லை

என்றும் அன்பு மருமகன்
சம்பத் லக்றுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேசமிக்க மாமா.....!

தந்தை போல் பரிவும்
கண்டிப்பும் காட்டிய
என் பாசமிகு மாமா!
உறவு வலுப்பட
உழைத்த உத்தமர் தாங்கள்
உண்மை நேசம் ஆழமானது
வெளிக்காட்ட முடியா அன்பை
மறைத்து வைத்து
பாசமுள்ள பிள்ளைகள் மேல்
பரிவு காட்டி
பிள்ளைகளின் உயர்விற்காய்
கணந்தோறும் உழைத்த மாமா!

உங்கள் பிரிவு
என்னை வாட்டுகிறது
குடும்பம் என்னும் கூட்டுக்குள்
குதூகலிக்க வைத்து விட்டு
குறுகிய காலத்திற்குள்
எமை எலாம் விட்டுப்
பிரிந்தது ஏன் மாமா?
உங்கள் நல் எண்ணத்தை
நிஜமாக்கி குடும்பத்துடன்
வாழ்ந்திடுவேன் மாமா!
இனி உங்களைப் போல்
யாரும் வரமாட்டார்கள்

சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

பாசமுள்ள மருமகள்
கி. கீர்த்தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தாத்தா.....!

வையத்துள் நாங்கள் வாழ
வழிகாட்டிய எங்கள் தாத்தாவே!
நலமுடன் வாழ்ந்த உங்களை
சற்றும் எதிர்பாராமல்
சட்டென்று இழந்துவிட்டேன்

உங்களைப் போல அணைத்திட
காத்திட யாருமில்லை - இவ்வுலகில்
நீங்கள் இல்லாத வாழ்வு - இனி
எப்போதும் முழுமையானதாய் இருக்காது

"பூஜா பூஜா" என்று
வாய் நிறைய அழைப்பீர்களே!
இப்போது உம் குரலைத் தேடுகிறேன்
என்னை விட்டு பாதியிலே எங்கே சென்றீர்கள்?

நினைவு தெரியாத சின்னஞ்சிறு வயதில்
என் கால்கள் தரையில் பட விட்டதே இல்லையாம்
தோள்களில் என்னைச் சுமந்து சுற்றி வருவீர்கள்
எல்லாமே போச்சு எமக்கிங்கே யாருண்டு?

அன்புப் பேரப்பிள்ளை
பூஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரனின் பிரிவாற்றாமை .....!

என் அன்பான அண்ணனே! உடன்பிறப்பே!
எந்நாளும் ஏற்றம்மிகு அண்ணனாய் இருந்தீரே!
ஓடி விட்டாயே என் உடன் பிறப்பே
மறக்க முடியாத எண்ணங்களால்
தவிக்கிறோம் அய்யா
என் அண்ணனே! விண்ணுலகை நீ அடைந்தாய்
மண்ணுலகில் தவிக்கிறேன் என் சகோதரனே!
உன் மறக்க முடியாத நினைவுகளுடன்

ஓடி விட்டாயோ உடன் பிறப்பே!
ஓலமிட்டு அழ வேண்டும் போல்
ஒவ்வொரு நாளும் துடிக்கின்றேன் உன்
ஒவ்வொரு செயலும் மனதில்
ஓடி ஓடிச் சுற்றிச் சுற்றி
ஒரு நாளும் மறக்கமுடியா எண்ணங்களால் வாடுகின்றேன்
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றேன்.

உடன் பிறந்த தம்பி
குணம்

அன்பை வார்த்தையில்
வெளிப்படுத்தாமல் தன்
உழைப்பு மூலம் உணர்த்தும்
ஒரே உறவு அப்பா மட்டும் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரிகளின் ஆறாத்துயர்.....!

எங்கள் பாசமிகு சகோதரனே!
பாசத்துடனும் அக்கறையுடனும் எங்களை
வழிநடத்திய எங்கள் குலதெய்வமே!
காலனவன் செய்த சதியதனால்
கொடிய நோய் உங்களைக் கொண்டு சென்றதய்யா
ஒரு கணமும் நினைக்கவில்லை அய்யா
இந்த வயதினிலே எங்களை எல்லாம்
தவிக்க விட்டு போவீர்கள் என்று
ஒரு கணமும் எண்ணவில்லை அய்யா
மீண்டும் பெற முடியாத பாசம்
பிரிக்க முடியாத பாசம் சகோதர பாசம் அய்யா
எங்கள் பாசத்தின் மூத்த சகோதரமே!
மீண்டும் ஒரு பிறப்புண்டேல் - எம்
சகோதரனாக நீங்களே வரவேண்டும் அய்யா
ஒரு தாய் வயிற்றில் பிறந்து அதிலும்
மூத்தவராய்ப் பிறந்து ஒன்றாய் இருந்து
ஒற்றுமையாய் வாழ்ந்து காலங்கள் வாட்டுதய்யா
மறக்க முடியாமல் தவிக்கிறோமய்யா!
அன்பான சகோதரனாக அக்கறையான சகோதரனாக
அதிகாரமான சகோதரனாக எல்லாமாக எங்களுக்கு
வழிகாட்டிய எங்கள் உடன்பிறப்பே
எங்களை எல்லாம் விட்டு விட்டு
எங்கய்யா போனீர்கள் - இன்னும்
கொஞ்சக்காலம் இப்பூமியில் வாழாமல்
எங்களை எல்லாம் உங்கள்
அன்பான நினைவுகளில் ஒவ்வொரு நொடியும்
மாறாத்துயரில் தவிக்கவிட்டு - எங்கள்
சகோதரனே உங்கள் இனிமையான
மறக்க முடியாத நினைவுகளுடன்....

உடன் பிறந்த சகோதரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் சித்தப்பா .....!

அனைவருக்கும் ஆலமரமாகி நின்றீரே!
எமது தந்தைக்கு தோழனாகவும், உடன்பிறவா சகோதரனாய் திருமண காலம் தொடக்கம் இணைபிரியாக் குடும்பமாக அனைவரும் வியக்கும் வகையில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தோமே ...எமது கருமங்களில் தந்தைக்குத் துணையாகவும், இணையாகவும் நின்று செயற்பட்டீரே!. நாம் உம்மால் வழிநடாத்தப்பட்ட பெற்றெடுக்கப்படாத பிள்ளைகள். என்றென்றும் நன்றி மறவோம் சித்தப்பா. எமக்கு உங்களிடம் பிடித்தது நேரான பேச்சு. அதனை உங்களிடமே கற்றுக் கொண்டோம். எவ்விடயம் ஆனாலும் மனம்விட்டு உரையாடுவதை நீங்கள் நன்றாக அறிவீர்கள் சித்தப்பா...
மனம் திறந்து பேசியும் பேசாது மௌனமானதேனோ? உங்களது இறுதிப் பார்வை எமது மனங்களை விட்டகலவில்லையே. எது எப்படியோ. எமது தந்தை உரைத்தபடி உமை தந்தை ஸ்தானத்திலேயே வைத்திருந்தோம். இதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஏனெனில் எமது தந்தையின் இழப்பினை உமது இழப்பில் உணர்கின்றோம்.

பெறாமக்கள்
சுதா, ஜெயந்தி, ஜெகன்,
பிரியா, பாவு

சுயநலம் இல்லாத அன்பின்
மூன்றெழுத்து மந்திரம் - அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகளின் ஏக்கம்.....!

குட்டித் தாத்தா குட்டித் தாத்தா என்றோமே
குட்டிக் குட்டியாய் மகிழ்ச்சிகளைத் தந்தீர்களே
வீதியில் செல்கையில் எங்கு எம்மைக் காண்கினும்
சிறு புன்னகை பூத்துச் செல்வீர்களே தாத்தா

தீபாவளி தைப்பொங்கல் என்றால் யாம் மகிழ
கைவிசேடத்தையும் ஆசிர்வாதத்தையும் வழங்கினீர்களே
ஆனால் இன்று பேர்த்திகள் என்று பெயர் சொல்லிக் கூப்பிட
தாம் இல்லையே அன்புத் தாத்தா

வலக்கையான தாத்தா பிரிந்த சில காலம் பின்
இடக்கையான தாமும் சென்று விட்டீர்களா!
வலக்கையும் இடக்கையும் இணைந்து விட்டீர்கள்
இருப்பினும் இங்கு நாம் இருகைகளையும்
இழந்து தவிக்கின்றோம் அன்புத் தாத்தா!

தங்கத்தாத்தா தாம் எம்மைத்
தனியாய் விட்டுப் பிரிந்து சென்றீர்களா?
தம் அருமையை இன்றும் உணர்ந்து கொண்டோம்
அன்புடன் தம்மை என்றும் வணங்கிடுவோம்.

தாத்தா தாம் உண்மையை உணர்த்தி
அன்பு எனும் அமிர்தத்தை அருளி
ஒழுக்கத்தின் அர்த்தம் ஒழுங்காய் கூறி
எமக்கு ஓர் நல் எடுத்துக்காட்டாய் ஆனவரே!

தமது ஆத்மா சந்தி பெற
மனமுருகி வேண்டுகின்றோம்.

அன்புப் பேரப்பிள்ளைகள்
(சபிதா, பூவிகா, திவ்யதாஸ், லக்சா, வசீகா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் சேவகனாய்....

**"என்பு சதை கொண்ட உருவங்கள் போக**
**எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க!"**

மண்ணிலே நல்ல வண்ணம் மகிழ்வுறவே வாழ்ந்து எண்ணிலா ஏற்றங்கள் பல கண்டு தன்னிகரில்லாத் தலைவராய்த திகழ்ந்தவர். எமது ஆலயத்தில் ஏறக்குறைய எட்டு ஆண்டுகளாய் அவராடு பயணித்த நாட்கள் மறக்க முடியாதவை ஒரு தலைவராய் தனியாக நின்று மீனாட்சி அம்மனுக்கு ஆற்றிய தொண்டும், நினைத்ததை செய்து முடிக்கும் ஆற்றலும், சரியோ தவறோ யாருக்கும் அஞ்சாது முகத்திற்கு நேராய் கதைப்பதும் எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் தனியாக முகங்கொடுத்து முடிவெடுக்கும் ஆற்றலும் உண்மையில் அவரிடம் நான் கண்டு வியந்தவை.

பிரச்சினைகள் வரும் போது சில வாக்கு வாதங்கள் வந்தாலும் அதை மனதில் வைத்திருக்காது அடுத்த நாட் காலையில் வந்து மனம் விட்டுப் பேசுவதும் உண்மையிலே உங்களது பெருந்தன்மையான குணம் தலைவர். உங்கள் நகைச்சுவைப் பேச்சும் கோவிலில் வளர்ச்சிக்காய் நீங்கள் பட்ட கஷ்டமும் சொல்லற்கரியவை.

உங்கள் சேவைகள் இவ்வுலகில் இன்னமும் காத்திருக்க காலனுக்கு உங்கள் சேவை தேவை போலும். அழைத்துக் கொண்டான் சீக்கிரமே. "யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற்றிட: என தான் மட்டுமன்றி ஜெயந்திநகர் கிராமமும் உயர்ந்திட வேண்டுமென நீங்கள் செய்த சேவைகள் என்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்கும்.

மண்ணோடு உங்கள் பூவுடல்
மறைந்து விட்டாலும்
நினைவுகள் எங்கள் இதயத்தில்
இருந்து ஒரு போதும் மறைவதில்லை
பாசமான நினைவுகளை எம்மிடம் விட்டு
சென்று விட்டீர்கள்! உங்கள்
ஆத்மா இறைவனின் பாதங்களில்
சாந்தி பெற எல்லாம் வல்ல
மீனாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

ஆலய குரு
மு. மகேஸ்வரநாத சர்மா,
ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம்,
ஜெயந்திநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
:021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
:021 2280024 021 2221595.
:021 2280024 021 2221595.
:077 6913244
: shritharanmp@gmail.com
: www.shritharan.com

2021.10.20

**மறைந்தாலும் மக்கள் மனங்களில் நிறைந்திருக்கும் மாமனிதர்!**

கிளிநொச்சி மாவட்டத்தில் தனக்கென்றோர் அடையாளத்தைப் பதித்து, அதன்வழி எல்லோராலும் அறியப்பட்ட திருவாளர். சண்முகம் சந்திரசேகரம் (சந்திரண்ணை) அவர்களின் திடீர் மறைவு ஒவ்வொருவராலும் ஏற்கமுடியாத இழப்பாக நிகழ்ந்தேறியுள்ளது.

ஜெயந்திநகர் கிராமத்தின் அத்தனை வளர்ச்சிப் பரிமாணங்களிலும் உடனிருந்து உழைத்த அவர், சமய, சமூக நேயம் மிக்க பல்வேறு பணிகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த ஒரு அறப்பணியாளன். தான் ஆற்றிய அரும்பணிகளினூடு அந்த ஊர் மக்களின் மனங்களில் நன்மதிப்பைப் பெற்ற ஓர் வழிகாட்டியாகவே சந்திரண்ணை தன் இறுதிக்கணம் வரை எல்லோராலும் அறியப்பட்டிருந்தார்.

அவர் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராக இருந்த காலத்திலேயே எனக்கும் அவருக்குமான அறிமுகம் நிகழ்ந்தது. கூட்டுறவுப் பணியில் இணைந்திருந்த இருவருக்கிடையே சாதாரணமாக ஆரம்பித்த அந்த சிநேகம், காலம் செல்லச்செல்ல, களங்கமற்ற அன்புகொண்ட, ஆத்மார்த்தமான உறவொன்றை எனக்கும் அவருக்குமிடையே இயல்பாய் தோற்றுவித்ததும் அந்த உறவுநிலை இறுதிவரை தொடர்ந்ததும் இறைவனின் செயலே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கூட்டுறவாளனாய், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் முகாமையாளராய், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் முன்னாள் தலைவராய், தற்போதைய உபதலைவராய், கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் ஆலயம் என்பவற்றின் தலைவராய் இருந்து அவர் எமது மாவட்டத்திற்கு ஆற்றியுள்ள சமய, சமூகப் பணிகளுக்கு அப்பால், என்மீது தனிப்பட்ட ஆழ்மன அன்பும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மீது அளவற்ற பற்றும் கொண்டு அவர் ஆற்றிவந்த அரசியற்பணிகளும் அவரது மறைவின் பின்னும் அவரை மனங்கொள்ளப் போதுமானவை.

நியாயமற்ற எல்லாச் செயல்களையும் கேள்விக்குட்படுத்தும் துணிச்சலும், எதையும் நேருக்கு நேர் சொல்லிவிடுகின்ற நெஞ்சுரமுமே மற்றவர்களிலிருந்து அவரை தனித்துக் காட்டும் தனிச்சிறப்பான அடையாளங்கள். அத்தகைய ஆளுமை மிக்க பெரு மனிதனாக, அன்புமிக்க சகோதரனாக, என்னை ஆத்மார்த்தமாய் அன்புசெய்த சந்திரன் அண்ணையின் திடீர் மறைவு தீராத்துயரைத் தந்தாலும் அவற்றையெல்லாம் கடந்து அவரது ஆத்மா அமைதிபெற மீனாட்சியம்மனின் திருப்பாதங்களைப் பணிந்து அவரது இழப்பின் வலி சுமந்து நிற்கும் குடும்பத்தினரின் துயரில் நானும் பங்கெடுக்கிறேன்.

**சிவஞானம் சிறீதரன்.**
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல மாவட்டம்,
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
කරච්චි ප්‍රාදේශීය සභාව, කිලිනොච්චිය
KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI
A -9 நெடுஞ்சாலை, கிளிநொச்சி. A- 9 Road, Kilinochchi
E-Mail:- kilinochchi1kps@gmail.com

எனது இலக்கம் / My No / මගේ අංකය - NP/14/45(02)/Council/ Gen/2021
திகதி / Date / දිනය - 2021.10.25

## அறப் பண்புகளின் அடையாளச் சொல் அண்ணன் சந்திரன்

"அன்பும் அறனும் உடைத்தான இவ்வுலகில்" நாம் தரிசிக்கக் கிடைத்த நல் மனிதர்களில் சந்திரன் அண்ணாவின் உறவு முதன்மையானதாகும். நேர்மையும், அறமும் அருகிவரும் காலமொன்றில் நான் அவருடன் பழக நேர்ந்தது எனது பேறாகும். அன்று தொடக்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,தமிழ்த்தேசிய அரசியல் பரப்பு என்பவற்றில் அவர் இணைந்து, பிணைந்து செயற்பட்டமையினை இந் நேரத்தில் நினைவு கூருகின்றேன். சத்தியம் தவறாமை, எதற்கும் அஞ்சாமை, நெற்றிக்கு நேர் நியாயங்களினை சொல்லும் வல்லமை எனும் பண்புகளால் அவர் என்னை கவர்ந்தவர். அவருடைய தலைமைத்துவமும், அறப்பேசி உறவு கொள்ளும் ஆளுமையும், கோபம் தொனிக்கும் வார்த்தைகள் எனினும் சுற்றம் இழந்து போகாத சுவாரஸ்யமான பேச்சுக்களும் எனது தலைமைத்துவ வாழ்க்கையில் பல பாடங்களினை கற்றுத் தந்தமையினை நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

மொத்தத்தில் தன் குடும்பத்தை, தான் வாழ்ந்த ஜெயந்திநகர் கிராமத்தை, ஆன்மீகத்தை, தாய்மொழியை, தான் வரித்துக்கொண்ட தமிழ்த்தேசிய இலட்சியத்தை இறுதிவரை உறுதியாக பின்பற்றி வையகத்தில் வாழுகின்ற மனிதர்களுக்கு வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய அமரர் சண்முகம் சந்திரசேகரம் அவருடைய வாழ்வு முறையை ஆகர்சித்து அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அருணாசலம் வேழமாலிகிதன்
தவிசாளர்
கரைச்சி பிரதேச சபை
கிளிநொச்சி

தலைவர் /செயலாளர் Chairman/Secretary 021-2283996
அலுவலகம் Office 021-2285761
தொலை நகல் Fax 021-2285690



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு மனிதர்களில் மகத்தான "முதன்மைக்கூட்டுறவாளர்" சந்திரன் அண்ணா

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுசங்கம் என்ற பெருவிருட்சத்தின் முதுகெலும்பு உடைந்தது போல் எமதுசந்திரன் அண்ணனின் இழப்பு காணப்படுகிறது. அமரர்.சண்முகம் சந்திரசேகரம் அவர்கள் நாற்பது ஆண்டுகாலம் கூட்டுறவுச் சேவையை ஆற்றியவர். இதற்காகவே அவர் மாவட்டத்தின் முதன் நிலை கூட்டுறவு விருதான **"முதன்மை கூட்டுறவாளர்"** விருதினையும் தனதாக்கியவர். எமது சங்கத்தில் நாற்பது வருட பொதுச் சபைப்பிரதி நிதி, ஆறு தடவைகள் இயக்குநர் சபை பிரதிநிதி, மூன்று தடவைகள் உபதலைவர் பதவிகள் வகுத்தவர். இதுதவிர மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், கரைச்சிகால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போன்ற வற்றினது தலைவராகவும் மாவட்ட கூட்டுறவுச் சபையின் இயக்குநர் சபைப் பிரதிநிதியாகவும் விளங்கியவர்.

கூட்டுறவுத் துறைக்காக தன்னை முழுமையாக ஒப்படைத்தவர். அதற்காகவே தன்னை மெழுகாக உருக்கியவர். பொதுவாகக் கூறினால் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுத் துறை தனது சிறந்த தலைவனை இழந்து தவிக்கின்றது.

## பொதுப்பணி

அமரர் சண்முகம் சந்திரசேகரம் அவர்கள் சமாதான நீதவானாக மக்களுக்கான சேவையை மிகவும் காத்திரமாக ஆற்றியவர். ஜெயந்திநகர் என்ற சிறந்த பெருமைக்குரிய கிராமத்தின் வளர்ச்சியில் கிராமத்தின் தலைமைத்துவத்தை ஏற்றுசெயற்பட்டவர். அக்கிராமத்தின் ஒவ்வொரு வளர்ச்சியும் இவரது பெயர் சொல்லி நிற்கின்றது. மீனாட்சி அம்மன் மேல் கொண்ட அதீத அன்பு மிகுதியினால் தன்னை கோவிலின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்து செயற்பட்டவர். தவிரவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உபதலைவராக பதவி வகித்து தன்னாலான சேவையை ஆற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் இல்லபணியில் பங்காற்றியுள்ளமை

ஜெயந்திநகரில் அமைந்துள்ள மகாதேவாசுவாமிகள் சிறுவர் இல்லத்தின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் பெரும் பங்காற்றிய பெருமகன். அமரர்.திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்கள் இல்லத்தை ஆரம்பித்து நடாத்திய காலத்திலும் பின்னரும் எங்களோடு கைகோர்த்து நின்றவர். ஜெயந்திநகரில் இவ்வாறு ஒரு சிறுவர் இல்லம் இருப்பது கிராமத்திற்கே பெருமையானது என என்னிடம் பலதடவைகள் கூறியுள்ளார். குழந்தைகளின் நலன்கள் தொடர்பில் அடிக்கடி என்னிடம் விசாரிப்பதோடு இல்லம் வந்து நேரடியாக குழந்தைகளின் நலன்களை கவனிப்பவர். என்ன தேவையாயினும் கேட்கும் படி அடிக்கடி என்னிடம் கூறி என்னை உற்சாகப் படுத்தியவர்.

## நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் கொண்டவர்

கூட்டுறவு உட்பட அனைத்து பொதுச் சேவைகளிலும் தனக்கென ஒரு மிடுக்கைப் பேணுபவர். அந்த மிடுக்கான தன்மை அவரின் வெளிப்படைத் தன்மையிலும் நேர்மையிலும் உருவாகியது எனலாம். எதையும் நேரடியாக வெளிப்படையாகக் கதைப்பார். அவரது இச்செயலால் பலரது எதிர்ப்பைச் சம்பாதித்தாலும் இவரின் நேர்மையுள்ளம் காரணமாக எவரும் எந்த பிரச்சினையும் காணமுடியாமையால் இவருடன் முரண்படத் தயங்குவார்கள். அவ்வாறு இறுதிவரை வாழ்ந்து காட்டியவர்.

## சிறந்த வழிகாட்டி

மூன்றாண்டுகள் என்னுடன் உப தலைவராக இருந்து சங்கத்தை உரியமுறையில் வளர்க்க உதவியவர். இவ் மூன்றாண்டில் சங்கத்தில் அதன் வளர்ச்சிப் பாதையில் பலசவால்கள், சோதனைகள் மற்றும் பயமுறுத்தல்களை எதிர்கொண்ட போதெல்லாம் எனக்கு வழிகாட்டி உரமூட்டி அப்பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றி பெற உத்வேகம் தந்தவர். அவரிலும் பார்க்க வயதிலும் அனுபவத்திலும் சிறியவனாக நான் இருந்தபோதும் எனது உயர்ச்சியை விரும்பி தனது உயர்ச்சியாகவும் சந்தோசமாகவும் கருதி பெருமதிப்பட்ட பெருமனிதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சா நெஞ்சம் கொண்டவர்

மேற்போன்ற எல்லாவற்றிலும் என் மனதை கொள்ளை கொண்டது அவரது அஞ்சாமையாகும். எதற்காவும் எந்தநேரத்திலும் யாருக்கும் பணிந்து போகாத பண்பைத் தன்னகத்தே கொண்டவர். அமரர்.சந்திரசேகரம் அவர்கள் சிறந்த செல்நெறியில் தன் வாழ்க்கை நெறியைக் கொண்டமையால் அவர் யாருக்கும் தலைகுனியாமல் வாழ்ந்து காட்டியவர். தன்னுடைய கொள்கை மற்றும் அரசியல் நிலைப்பாடுகளில் உறுதியாக நின்றபோதும் எனது வேண்டு கோளுக்காக சங்கத்தின் நிர்வாகச் செயற்பாடுகளில் அவற்றைக் கலக்காமல் பார்த்துக் கொண்ட தெளிவான நிலைப்பாடு கொண்டவர். அரசியல் வேறு, சங்கம் வேறு எனவும் சங்கத்தின் உள்ளே அரசியலை அனுமதிக்கக் கூடாது என்பதில் உறுதியான எண்ணம் கொண்டு செயற்பட்டவர்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்க அமரர். சண்முகம் சந்திரசேகரம் அவர்கள் இவ்வுலகில் ஒருமனிதன் எவ்வாறு வாழவேண்டுமோ அவ்வாறு வாழ்ந்தவர். எனவே அவரது ஆன்மா எல்லாம்வல்ல சிவனின் பாதாரவிந்தங்களை அடைந்து நித்திய வாழ்வு வாழும். அதற்காக சிவபெருமான் அருள்புரிய வேண்டும் என இறைஞ்சுவதோடு அவரது பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தாருக்கு எனது ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சரவணபவன் மோகனபவன்,
திட்டமிடல் பணிப்பாளர் சுகாதாரஅமைச்சு,
வடமாகாணம்,
தலைவர், கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,
தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்கள்

கிளி மண்ணின்
மைந்தனே! சந்திரன் அண்ணா!
உம்மை இழந்து
துடிக்கின்றோம் நாம்
கிளி மக்கள் கூடி
இன்புற்ற காலம்
சேவையே இலக்கணமென
செய்கையால் காட்டினீரே!
ஆலய வளர்ச்சியில் மட்டுமன்றி
கிராமத்தின் வளர்ச்சியிலேயும்
அரும்பாடுபட்டீரைய்யா!
உம் சேவையால்
உயர்ந்தோம் நாம்
நண்பனாய் சகோதரனாய்
நல்வழிப்படுத்தினீரே!
ஆன்மீகத்திலும் மூழ்கி
நல்வழியும் காட்டினீரே!
தங்கள் அன்பு முகம் காட்டாத
அமைப்புக்களே இல்லையையா
வன்னி நில மெங்கும்
உம் பெயர் உச்சரிக்கும்
மறைந்தாலும் உம் நாமம்
வானோங்க ஒலிக்குமையா!
உம் பிரிவை ஏற்க மறுத்து
உம் சேவைக்குத் தலைசாய்த்து
காணிக்கையாய் எம் கண்ணீரே!

ஸ்ரீ மீனாட்சி அம்மன்
ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையின் அடையாளம் சந்திரன் அண்ணா...

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் செயற்பாட்டில் மூன்றில் இரண்டு காலப்பகுதியில் பயணித்த முதிர்ந்த ஒரு மனிதம் அமரர் சந்திரசேகரம் அவர்கள். சந்திரன் அண்ணா என செல்லமாக அழைக்கப்படும் இவர் மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தின் அடையாளம். 22 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு ஆயுட்கால உறுப்பினராக இணைந்து 20 வருடங்கள் மாவட்ட நிர்வாக சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள் வழிகளில் இருந்து நேர் மனப்பாங்குடன் சிறந்த ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் சங்கத்தின் செயற்பாட்டிற்கு வழங்கிய பெருமை அண்ணாவிற்கே உரித்தானது.

இலங்கை செஞ்சிலுவை சங்க மாவட்ட பிரதிநிதித்து வத்தினால் தனது குடும்பமாக கருதி வழிநடத்திய தலைமைத்துவ பண்பும் எந்தவொரு விடயத்தையும் நிதானமாக பகுத்தாராய்ந்து நிறுவன வளர்ச்சிக்கு ஒத்துழைத்த விடாமுயற்சியும் எப்போதும் வெளிப்படையாக பேசி உறுப்பினர்களை நேரான பாதையில் வழிப்படுத்திய மாற்றுச் சிந்தனை ஆற்றலும் சந்திரசேகரம் எனும் மாற்றத்திற்கான மனிதனால் ஏற்படுத்தப்பட்ட செஞ்சிலுவை சங்கத்தின் அடையாளமாகும்

அமரர்.சந்திரசேகரம் அவர்களின் இழப்பு எமது சங்கத்தின் பாடு செய்ய முடியாத இழப்பாகும். அவரது எண்ணங்கள் என்றும் செஞ்சிலுவை சங்கத்தின் செயற்பாட்டில் நின்று நிலைத்து வாழும் நல்லதொரு செஞ்சிலுவையாளனை இழந்ததில் கிளிநொச்சி கிளையின் உறுப்பினர்கள், பணியாளர்கள், தொண்டர்கள் நாம் தாங்கொணாத் துயர் அடைகின்றோம். சிறந்த சமூக சேவையாளனை இழந்த சோகத்தில் மாவட்டம் கலக்கமடைகின்றது. பாசத்தின் பிணைப்பால் குடும்பத்தின் தலைமைத்துவத்தை அன்பான கணவனை, அப்பாவை, மாமாவை, தாத்தாவை, அண்ணாவை, மைத்துனரை, பிரிந்த பேரதிர்ச்சியில் தடுமாற்றமுற்றுள்ள குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் சந்திரன் அண்ணாவின் ஆத்மா சாந்தி பெற அவரது குல தெய்வமாகிய ஶ்ரீ மீனாட்சி அம்மன் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

**தலைவர்**
**இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
**கிளிநொச்சி கிளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுத்துளிகள்

### வெளிப்படைத் தன்மையுடைய கூட்டுறவாளர்

ஒருவருடைய இழப்பு எந்தளவுக்கு எம்மை பாதிக்கின்றது என்பதை உணரும் போதே நாம் அவருடைய நெருக்கத்தையும் முக்கியத்துவத்தையும் மேலதிகமாக அறிகின்றோம். எமது சங்கத்தின் தலைவர் சண்முகம் சந்திரசேகரம் அவர்களின் இழப்பு அப்படியான ஒன்று. இவர் கூட்டுறவுச் சேவைகளில் ஆற்றிய தொடர் சேவை அனைத்து கூட்டுறவாளர்களையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த சந்திரன் என்று செல்லமாகக் கூப்பிடும் சந்திரசேகரம் என்பவரை 1998ஆம் ஆண்டு தொடக்கம் இவர் எமது கிளி/கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் பொதுச் சபை பேராளராக ஜெயந்திநகர் கிளைக் குழு ஊடாக தெரிவு செய்யப்பட்ட போது எனக்கு இவரை தெரியும். அதற்கு பின்னர் 2001ஆம் ஆண்டு சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவின் போது சங்கத்தின் இயக்குநர்சபைக்கு தெரிவு செய்யப்பட்டு பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இக்காலப் பகுதியில் சங்கத்தின் பொது முகாமையாளராக நான் பணியாற்றிக்கொண்டிருந்தேன். இதன் போதே இவருடன் நான் கூட்டுறவின்பால் சேர்ந்து பயணிக்க வேண்டிய சந்தர்ப்பமும் தேவையும் இருந்தது. தொடர்ந்து இவருடன் இரண்டு தடவைகள் ஆறு வருடங்கள் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிற்பாட்டை முன்னெடுத்துச் சென்றேன். இவரது முகத்தோற்றம் பார்ப்பதற்கு சந்திரன் போன்றது. அவரது தோற்றமும், கம்பீரமும், குரலும், பல்லோராலும் அறியப்பட்டவை. உறுதியான தீர்மானங்களும் பக்கசார்பற்ற நடுநிலை மனிதராகவும் இருப்பார் தலைவர் சந்திரசேகரம் அவர்கள். தொடர்ந்து மீள்குடியேற்றத்தின் பின்பும் இவரது இறப்பு வரை எமது கிளி/ கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மூன்று தடவைகள் பத்து வருடங்களாக கூட்டுறவுப் பணியாற்றியவர். இவர் எதற்கும் துணிந்து பேசவும் செயலாற்றவும் வல்லவர் இவருக்கான முதன்மை கூட்டுறவாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் விருதினையும் கௌரவத்தினையும் 2019ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்றாவது நிலை கௌரவத்தினையும் பெற்றார். இவரது கூட்டுறவின் சேவைகளாக கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் கிளிநொச்சி மாவட்ட சமாசத்தின் தலைவராகவும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் உபதலைவர் மற்றும் கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவராகவும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை நிர்வாக உறுப்பினராகவும் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும், மீனாட்சி அம்மன் ஆலய தலைவராகவும், வேறு பல பொதுச் சேவைகளையும் ஏற்று முன்னெடுத்துச் சென்றவர். இவரது கூட்டுறவுச் சேவைக்காலத்தில் எமது சங்கத்துடனேயே நீண்ட காலம் தொடர்ந்து பயணித்துள்ளார். இவரின் சேவைகள் சொல்லில் அடங்காதவை. எனக்கு இவர் அடிக்கடி சொல்லும் ஒரு விடயம் "நேர்மையாக செயற்படுபவருக்கு எதனையும் நெஞ்சுக்கு நேரே நின்று பேசுவதற்கு தடை ஏதும் இருக்காது" என்பதாகும். கூட்டுறவுச் சங்க வளர்ச்சி கருதி ஒழிவு மறைவு ஏதுவுமின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு வழிகாட்டியாக ஒரு தலைவராக, ஒரு சகோதரனாக நேர்மையுடன் செயலாற்றி எம்மை எல்லாம் ஆறாத்துயரில் விட்டுச் சென்ற எமது சங்கத்தின் தலைவர் சண்முகம் சந்திரசேகரம் அவர்களின் இழப்பு மிகவும் துயரமாக தாங்கிக் கொள்ள முடியாததாகவே உள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

தேவராசா நிதிதேவன் (முகுந்தன்)
பொது முகாமையாளர்
கிளி/கால்நடைவளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுப் பணி தொடங்கி

கூட்டுறவின் அரவணைப்பில் குணக் குன்றாய் சேவையேற்று கூட்டுறவு நலனோன்பு வக்கற்றோர் வகையற்றோர் வாழ்வாதாரம் தட்டாத நேர் நோக்கு தளராத நல்வாக்கு எல்லோர்க்கும் சந்திரனாய் நல்வாழ்வு வாழ்ந்து நற் பணிகள் ஆற்றி மீனாட்சி அம்மன் இணையடியில் சேர்ந்தாரே..

பிறப்பும் இறப்பும் இறைவனின் நியதிப்படி நடப்பவை அதனை மனிதனால் மாற்ற முடியாது. அது இறைவனின் செயலாகும். எனினும் பிறந்தவர்கள் பலர் இறக்கும்வரை **"துன்பக் கடலோடி துஞ்சுவதே மாந்தர் தொழிலாகும்"** சிலர் உலக வாழ்வின் நோக்கமும் மனித வாழ்வின் மகத்துவத்தையும் அறிவாற்றலாலும் அனுபவத்தாலும் அறிந்து எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித் தான்வாழ வேண்டுமென்ற நேரிய வாழ்க்கைப் பாதையூடாக எல்லோரும் இன்புற்றிருக்க வழிதேடி என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற வாக்குக்கு அமைய வாழ்ந்து இறந்தும் இறைவா பெரியோர்களாகி விடுகின்றனர். அந்த வரிசையில் அமரர் சந்திரசேகரம் ஐயா அவர்களும் இடம்பிடித்துக் கொண்டார்.

கூட்டுறவுக் குழுமத்துடன் தனது சேவையை ஆரம்பித்து பல கூட்டுறவு நிறுவனங்களில் தாபகராகவும் தலைவராகவும் துணைத் தலைவராகவும், செயற்குழு உறுப்பினராகவும், திறம்பட செயலாற்றியதால் அவரது சேவையை உணர்நத கூட்டுறவுச் சங்கம் மாவட்டத்தின் சிறந்த கூட்டுறவாளர் என்ற பெயரால் கௌரவித்தது.

இந்த வகையில் எமது கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் ஆரம்ப கால செயற்குழு உறுப்பினராகவும் பின் துணைத்தலைவராகவும் தொடர்ந்து தலைவராகவும் தனது இறுதிக் காலம் வரை சேவையாற்றி எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட அமரர் சண்முகம் சந்திரசேகரம்ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய சிரம் தாழ்த்தி இறைவனிடம் வேண்டுகின்றோம்.

பொதுமுகாமையாளர்/ செயலாளர் திரு.அ. பிரபாகரன்
கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்
செல்வாநகர்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரன் ஐயாவிற்கு சமர்ப்பணம்!

கூடும் உறவே கூட்டுறவென்று கூடி வாழோணும்
கூடிய பிறகு குற்றம் காணும் கொள்கை தாள்ளோணும்
மக்கள் நாடும் சேவை நலனே நல்கி நன்றாய் வாழோணும்
வாடும் மக்கள் பசிப்பிணி தீர வருந்தி உழைத்த
சந்திரன் ஐயாவிற்கு சமர்ப்பணம்!

**"நன்றே செய்திட வேண்டும்**
**அதை இன்றே செய்திட வேண்டும்"**

என்ற வாக்கியத்திற்கமைய வாழ்ந்து காட்டிய பெருந்தகை சந்திரன் ஐயா அவர்களாவார். **"தக்கார் தகவிலராதல் அவரவர் எச்சத்தால் கொள்ளப்படும்"** இது வள்ளுவர் வாக்கு. இதற்கமைய சந்திரன் ஐயா அவர்கள் ஆற்றிய சேவை இன்றும் சான்று பகர்கிறது. ஆன்மீகத் தொண்டு, கிராம அபிவிருத்தித் தொண்டு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் தொண்டு என பல தொண்டுச் சேவைகள் அவரது அயராத முயற்சியால் இன்றும் தெட்டத் தெளிவாக தென்படுகின்றது. அவ் எச்சங்கள் அவர் இறந்தும் இறவாப் பெரியோனாக பறைசாற்றுகின்றன.

சந்திரன் ஐயா அவர்கள் பெரிய கல்வியானளாக இல்லை என்றாலும் தனது அறிவாற்றலாலும் அனுபவ ரீதியாகவும் தனது வாழ்வியலில் உணர்த்தப்பட்ட ஏற்றத் தாழ்வுகள், குறை குற்றங்கள், சமூக ஏற்றத்தாழ்வுகள் இதனால் மனித வாழ்விற்கு ஏற்படும் இன்னல்கள் இடையூறுகளை அனுபவித்து வந்த காரணத்தினால் சமூக சீர்கேடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் களைந்தெறிய வேண்டும் என்ற நேர்கொண்ட செயற்பாட்டினை கூட்டுறவு சாதனமூடாக செயற்படுத்த முனைந்தார். அதில் குறிப்பிடத்தக்களவு வெற்றியையும் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கூட்டுறவு சேவையூடாகவும் அவரது சேவை திறமையாலும் அனேக சமூக சேவை நிறுவனங்களின் கௌரவ சேவை பணிகளும் இவரைத் தேடி வந்தன **"செய் அல்லது செத்துமடி"** என்ற வாக்கிற்கு அமைய தான் சார்ந்த நிறுவனங்களில் அயராது பாடுபட்டு வெற்றி கண்ட மனிதராவார். நிமிர்ந்த தோற்றமும், நேர்கொண்ட பார்வையும், சலனமற்ற செயற்திறனும் கொண்ட சந்திரன் ஐயா அவர்கள் தான் கொடுத்த வாக்குறுதிகள் எதனையும் தன் வாழ்நாளில் தட்டிக் கழித்தது கிடையாது.

**"சொல்லுக சொல்லை பிறிதோர் சொல் அச்சொல்லை**
**வெல்லும் சொல் இன்மை அறிந்து"**

என்ற குறளுக்கு அமைய அறிந்து அளந்து ஆலோசித்துக் கூறும் இயல்புடையவர். இவர் தனது மனச்சாட்சிக்கும், மனநீதிககும், இறைநீதிக்கும் சரியாக இருக்கும் என கருதினால் தமர் பிறர் பெரியோர், சிறியோர் என்று பாராது நீதியை நிலை நாட்டுவதில் தயக்கம் காட்டுவதில்லை. இதனால் இவரது சமூகப் பணியிலும் வாழ்க்கைப் பாதையிலும் பல நெருப்பாறுகளையும் காட்டாறுகளையும் கடந்து வெற்றி கொண்ட ஒரு செயல் வீரன்.

**"கோடாண கோடி கொடுப்பினும் தன்னுடைய நா**
**கோடாமை கோடி உறும்"**

என்ற ஔவையார் வாக்கை அடியொற்றி வாழ்ந்து காட்டியவர். இவர் பல கூட்டுறவு நிறுவனங்களில் ஸ்தாபகராகவும் தலைவர், செயலாளர், உபதலைவராகவும், நிர்வாக உறுப்பினரா கவும் பல பதவிப்படிகளில் நின்று நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர். இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போன்றவற்றில் தலைமையாளராக இருப்பதுடன் விசேடமாகப் பல ஆன்மீகப் பணிகளிலும் முழுமையாக செயற்பட்டிருக்கிறார். இதற்குத் தக்க சான்றாக ஜெயந்திநகர் மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தில் நெடுங்கால தலைமைத் தொண்டனாக செயற்பட்டு ஆலயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுமானங்களைத் திறம்பட அமைப்பித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சந்திரன் ஐயா அவர்கள் தம்மை ஓர் முழுமையான சமூக சேவையாளனாக மாற்றுவதற்கு அவரது குடும்பத்தாரின தியாகமே முக்கிய காரணமாகும். வந்தாரை வரவேற்று மனையை மங்களம் பெறவும் மக்களை நல்ல கல்வியாளராகவும் ஆக்குவித்த பெருமையும் பேறும் சந்திரன் ஐயா அவர்களையும் அவரது துணைவியாரையும் சாரும். இவரது துணைவியாரது தியாக வாழ்வும் பொறுமையும் செயற்திறனுமே சந்திரன் ஐயா சமூக சேவையாளனாக் காரணமாக இருந்தது என்பது மறக்க முடியாத உண்மையாகும். இவரது ஆன்மீக சேவையாலும், சமூக சேவையாலும் இறையருளால் இவரது பிள்ளைகள் அனைவரும் மதிப்புமிகு கல்விமான்களாக அவர்களது துறைகளில் மேல்நிலை பெற்று நல்ல அரச பதவிகளை, தனியார் பதவிகளை அலங்கரித்துக்கொண்டிருப்பது கண்ணூடாக காணமுடிகின்றது. இந்த நல்ல சேவையாளர் என்றும் எல்லாம் வல்ல ஸ்ரீ மீனாட்சி அம்மனின் அருள் பெற்று சிவபேறு அடைய வேண்டி நிற்கின்றோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!!!**

திரு. சு. கணபதிப்பிள்ளை
தலைவர்
கிளிநொச்சி மாவட்ட
சி. க. கூ. ச. சமாசம்

**அப்பா இல்லாத வாழ்க்கையை**
**வாழ்ந்து பார்க்கும் போது தான் தெரியும்**
**அப்பா என்பது வார்த்தை இல்லை**
**வாழ்க்கை என**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தேசத்தின் மைந்தன், கூட்டுறவின் பற்றாளர்!

எமது சமாசத்தின் தலைவர் திரு. சண்முகம் சந்திரசேகரம் கூட்டுறவுத் துறையில் நீண்டகாலமாக கௌரவ சேவைகளிலிருந்து, கூட்டுறவிற்காகவும், பணியாளர்களிற்கும் பலவித அர்ப்பணிப்புக்களையும் சேவைகளையும் செய்து எமது சமாசத்தில் மூன்று வருட காலமாக கௌரவ தலைவராக இருந்து சமாச வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் பணியாளர் நலன் காத்த தலைவரும் கூட்டுறவு மேல் கொண்ட பற்றாலும், கூட்டுறவுக்கு ஆற்றிய சேவையாலும்" முதன்மைக் கூட்டுறவாளர்" எனும் விருதினைப் பெற்று எமது கிளி/ கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசத்தின் தலைவர் திரு.சண்முகம் சந்திரசேகரம் ஐயா இவ்வுலகை விட்டு நீங்கி இறைவனடி சேர்ந்துள்ளார். இவரது இழப்பு கூட்டுறவில் மாபெரும் இழப்பாகி வருந்துகின்றோம். எமது தலைவரது ஆத்மா சாந்தியடைய எமது சமாசத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

கிளி கால்நடை வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்க சமாசம்
இயக்குனர் சபை உறுப்பினர்கள்
பொதுமுகாமையாளர்

அப்பாவின் அன்பை விட சிறந்தது
இந்த உலகில் எதுவுமில்லை
அது போல அப்பாவை பிரிந்த
வலியை விட கொடியது எதுவுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் மனங்களை வென்ற தலைவர்

ஜெயந்திநகர் மண்ணினுடைய மைந்தனும் எம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நீண்டகால தலைவரும் பல சமூக அமைப்புகளில் இருந்தவரும் குறிப்பாக சனசமூக நிலையம் மீனாட்சி அம்மன் ஆலயத்தினை வேரூன்றி விருட்சமாக்கி மக்கள் மனதில் பதிந்தவரும் அத்துடன் கிராம அபிவிருத்தி சங்கத்தையும் கட்டிக் காத்த ஒரு உன்னத மனிதன் தற்போதைய நிர்வாகத்தின் உப தலைவராக செயற்பட்டவரும் பல நெருக்கடிகள் வந்த பொழுதிலும் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மீளப் புனரமைக்க வேண்டிய காலம் ஏற்பட்ட போதும் அந்த நெருக்கடி நிலையிலும் பல இடங்களில் சென்று நிதிகளைத் திரட்டி அக்கட்டத்தினை எழுப்ப பேராதரவாக இருந்தவர். அவருக்குத் தனிப்பட்ட வேலைகள் இருந்தாலும் அதை ஒதுக்கி கிராம மக்களுக்காக உழைத்தவரும் நீண்ட காலமாக மக்கள் மனதில் இடம் பிடித்தவர். இப்படி சொல்ல முடியாத அளவிற்கு நீங்கள் செய்த சேவை இன்னும் எம் மனதினுள் நிறைந்திருக்கிறது.

உண்மையிலேயே ஏன் உம்மை இந்தக் காலன் விரைவாக அழைத்தானோ எமக்குத் தெரியவில்லை. உங்களுடைய செய்தி கேட்ட நெஞ்சு பதை பதைக்கின்றது. இதயம் துடிக்கின்றது ஐயா! நீர் விட்டுச் சென்ற பாதையை எங்களுடைய மக்கள் தொட்டுச் செல்வார்களா என்று கூடத்தெரியவில்லை. உம்முடைய இழப்பைத் தாங்க முடியாது நாங்கள் தவிக்கின்றோம். எம்முடைய மண் தவிக்கின்றது. மக்கள் புலம்புகின்றனர் ஐயா. மறைந்த பின்னும் வாழ்கின்றீர்கள் ஒவ்வொருவர் மனதிலும். கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பிலும் உங்கள் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிக்கின்றோம்.

க. கஜீந்தன்
உப செயலாளர்
ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயந்திநகர் கிராமத்தின் சந்திர ஒளி!

"மக்கள் நலனின் சேவகனாய்
கூட்டுறவுச் சங்கத்தின் சிக்கனமாய்
கிராமத்தின் பக்குவனாய்
பொதுத் தொண்டின் வெளிச்சமாய்
எமது சங்கத்தின் தலைவராய்
நீண்ட காலம் பணியாற்றினீர்"

சங்கத்தின் வளர்ச்சியைக் கண்ணும் கருத்துமாய் சிக்கனக் கூட்டுறவின் தன்மையினையும் அதன் மகத்துவத்தையும் பக்குவமாய் எடுத்தியம்பினீர். அத்துடன் சேமிப்பின் பங்களிப்பையும் எமக்குப் புரியும் வகையில் மெருகூட்டினீர். எல்லா மக்களும் பயன் பெறும் வகையில் மெருகூட்டினீர். எல்லா மக்களும் பயன் பெறும் வகையில் அதன் மகத்துவத்தைப் புரிய வைத்தீர் . உமது ஒப்பற்ற கடமைகளை இரு கண்போலக் காத்திட்டீர். எமது சங்கத்தின் குல விளக்காய் மிளிரும் சந்திரன் அண்ணா உமது ஒப்பற்ற சேவையினை ஈடு செய்ய முடியாது. நீர் மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றாலும் உமது பணி தொடரும். என்என்றும் உம் நினைவு மக்கள் மனதில் வாழும்.

ஜெயந்திநகர் தெற்கு
சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம்

நாம் தவறான பாதையில் சென்றால்
ஓடி வந்து நம்மை தடுக்கும்
முதவாலது உறவு "அப்பா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது கழகத்தின் ஆலோசகரே!

பதுமன் கொடுத்த யாக்கையை
பொதுச்சேவைக்காக அர்ப்பணித்த - தியாகியே!
பார்த்தவுடன் கம்பீரமான தோற்றமும்
பேசியவுடன் பரிவுடன் கூடிய அரவணைப்பும்
பழகியவுடன் பாசம் காட்டும் - தந்தையே!

எமது கழகத்திற்கு ஆலோசனை வழங்கும்
சிந்தனைச் சிற்பியே சிறந்த பற்றாளனே!
எம்முடன் சிறுவர் போன்றே சேவை செய்தவரே!
கழகத்திற்கான அனைத்து நிகழ்விலும்
பங்கு பற்றிய - தோழனே!
உம்மைப் பிரிவோம் என்று
ஒரு போதும் நாம் நினைவிக்கவில்லையே!

கிரி, சுகிர் எனும் வீரர்களை எங்களுடைய
கழகத்திற்குத் தந்த அப்பாவே!
தனது தன்னலம் துறந்து - எம்முடைய
கிராமத்தின் வளர்ச்சியில் ஈடுபட்டு
ஆலமரம் போன்று நிழலாய் நிற்பவரே!
உம்மை எப்போது - இனிமேல் காண்போம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல்களினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கண்ட சமூக சேவையாளன் சந்திரன் அண்ணா

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயந்திநகர் கிராமத்தில் 1985 ஆம் ஆண்டு முதன்முதலாக சனசமூக நிலையக் கட்டிடத்தில் கண்ட ஒரு சமூகப் பண்பாளன் சந்திரன் அண்ணா. அன்றிலிருந்து இன்று வரை நண்பனாகவும் சகோதரனாகவும் ஆலோசகராகவும் மனதிலும் நினைவிலும் நீங்காத இடத்தைப் பிடித்த சிறப்புக்குரியவர். கிராமத்து மக்களின் நலன்களிலே அக்களை கொண்டு வாழ்ந்ததோடு எளிமையான வாழ்க்கை வாழ்ந்த மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

கிளிநொச்சி இடப்பெயர்விற்கு முன் ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராக சந்திரன் அண்ணா இருந்த காலத்தில் நான் சங்கத்தின் உள்ளகக் கணக்காளராகச் செயலாற்றினேன். மீளக் குடியமர்வின் பின்பு கணக்குகளிற்கான எல்லா ஆவணங்களையும் தனது சொந்த உடைமை போல் பாதுகாத்து கணக்காய்வுக்கு உட்படுத்திய போதும் எந்தவிதமான தவறுகள் குறைபாடுகள் இல்லாது காண்பித்த பெருமகன் சந்திரன் அண்ணா.

கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் அதிபர் என்ற வகையில் 1995ஆம் ஆண்டு கிளி/இந்து மகாவித்தியாலயத்தில் இருந்து ஆரம்பப்பிரிவு தனியாகப் பிரிக்கப்பட்ட போது பாடசாலைக்கான இடத்தைத் தெரிவு செய்வதிலிருந்து கட்டடம் அமைக்கும் வரை கிராம மக்களை ஒன்று திரட்டி துப்புரவு செய்து தற்காலிக கொட்டகைகள் அமைத்து தற்போது இயங்கும் இடத்தில் பாடசாலைய உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட செயல் வீரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் இடப்பெயர்வின் போது சகல பாடசாலைகளும் இடம் பெயர்ந்தபோது எமது பாடசாலையின் உடைமைகளை எறிகணைத் தாக்குதலுக்கு மத்தியிலும் தனிமனிதனாக முன்னின்று பாதுகாப்பாக ஸ்கந்தபுரம் பகுதிக்கு கொண்டு சென்று சேர்த்த கடமை வீரனாகத் திகழ்ந்த பெருமை அண்ணனையே சாரும்.

பாடசாலையில் நடைபெறும் எந் நிகழ்வாயினும் உரிய நேரத்திற்கு சமூகமளித்து நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடித்துச் செயற்படுகின்ற நல்லுள்ளம் கொண்ட ஓர் அற்புத மனிதர். ஜெயந்திநகர் கிராமத்திற்கு எனக்கு தெரிந்தவரை தேவைகளை இனங்கண்டு அத் தேவைகள் நிறைவேறும் வரை ஓயாது செயற்பட்டு காரியசித்தி ஏற்பட கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் உழைத்த ஒரு நல்ல மனிதர். அது மட்டுமன்றி எந்த விடயமாயினும் எவருடனும் எவ்வித தயக்கம் பயமின்றி நேரடியாகத் கதைக்கும் தன்மையுள்ளவர்தான் சந்திரன் அண்ணன்.

இவரின் இழப்பு அவருடைய குடும்பத்திற்கு மட்டுமன்றி ஜெயந்திநகர் கிராம மக்களுக்கே பேரிழப்பாகும். அவரது ஆத்ம சாந்திக்காக பணி செய்து இறைவனடி சேர்ந்த அமரரின் சேவைகளை நினைவு கூர்வதோடு அன்னாரின் குடும்பத்தினர் ஆறுதல் ஆறுதல் அடையவும் அமரரின் ஆன்மா சாந்தி பெறவும் எல்லாம் வல்ல இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திரு.பா. கணேசமூர்த்தி
அதிபர்
கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப
வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கறை மிக்க செயற்பாட்டாளர்

எமது ஜெயந்திநகர் கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கம், ஆலய பரிபாலன சபை, விளையாட்டுக்கழகம் என பல்வேறு சமூக மட்ட செயற்பாடுகளிலும் மிக விருப்பத்துடன் செயற்பட்ட சந்திரசேகரின் திடீர் இழப்பு வருத்தத்துக்குரியது. நாங்கள் பதவி ரீதியாக உயர்ந்திருந்த போதும் எமது கிராமத்தின் பிள்ளைகள் தான் நீங்கள் உங்கள் செயற்பாட்டுக் காலத்தில் எமது கிராமத்துக்காகவும் நீங்கள் செயற்பட வேண்டும் என்பதனை காணும் போதெல்லாம் வலியுறுத்திய ஒருவராக இவரை நான் கண்டிருக்கின்றேன். ஜெயந்திநகரின் அபிவிருத்திக்காக நான் ஒன்றுபட்டு பணியாற்ற சிந்தித்த போது தனது இல்லத்தில் அதன் முதலாவது ஒன்றுகூடலை நடாத்த உதவியதுடன் அனைத்து வழிகளிலும் அந்த அமைப்பு வளர வேண்டுமென ஆசைப்பட்டார். அத்துடன் மாவட்ட மட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் நல்ல பல விடயங்களை செய்ய அக்கறை காட்டிய ஒரு செயற்பாட்டாளரின் மறைவில் துயருறும் குடும்பத்தாருக்கும் ஆறுதலைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

திருமதி. ரூபவதி ஜெகதீஸ்வரன்,
அரசாங்க அதிபர், கிளிநொச்சி.
தலைவர்
ஜெயந்திநகர் அபிவிருத்தி அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மை கூட்டுறவாளர் விருது பெறுதலின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதான நீதவானாக தெரிவு செய்த போது




Co op City திறப்பு விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச கூட்டுறவு தினத்தின் போது




## சேவை நலன் பாராட்டு விழாவின் போது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மீனாச்சி அம்மன் திருவிழாவின் போது



அடிக்கல் நாட்டல் நிகழ்வின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பை வாழும் காலத்திலேயே வழங்கியிருந்தோம். விருதின் மீது முதல் தடத்தைப் பதித்த திரு.இராசநாயகம், திரு.குகராஜா ஆகியோர் தொடர்ந்து இறைபதம் அடைந்த பின்னர் இவ்விருதினை வழங்குவது பற்றி ஒரு வித பின்னடிப்பு எமது பணியாளர் சபைக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் அது தவறான கற்பிதம் என்பதனை வலியுறுத்தி மீளவும் அப்பணி தொடர உறுதியுடன் இருந்தார். அதனால் அவருக்கே நாம் இவ்விருதினையும் வழங்கியிருந்தோம். இவரது துணிவு, சவாலை எதிர்கொள்ளும் திறன் என்பவற்றை நாம் இதன் போது கண்டுகொண்டோம். "சாவு மனிதருக்கானது. அது நிகழ்வுகளால் ஏற்படுவதில்லை" என அவர் வலியுறுத்தியது எனக்கு இப்போதும் பசுமையாக உள்ளது. நல்ல நண்பன், நல்ல சகபாடி, நல்ல கூட்டுறவு துணையாள் என்ற பாத்திரங்களுடன் என் மனதில் நிறைந்துள்ள சந்திரண்ணனின் மறைவு பேரிழப்பானது. வாழ்வு குறுகியது. அது முடிவுக்கு வந்தே தீரும் என்ற உண்மையுடன் சாந்தியடைவோம். அவர் தம் மனைவி பிள்ளைகள் சுற்றத்தவர்களுக்கும் ஆறுதல் பகிர்வோம் .

அமரசிங்கம் கேதீஸ்வரன்
உப தலைவர்
இலங்கை தேசிய கூட்டுறவு சபை
தலைவர்
மாவட்ட கூட்டுறவுச் சபை
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி பதாதைகள் பதிப்பித்தோர்

01. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.
02. ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபையினர்.
03. கிளி/ கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.
04. கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்.
05. கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
06. கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.
07. ஜெயந்திநகர் தெற்கு சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம்.
08. ஜெயந்திநகர் விளையாட்டுக் கழகம்.
09. சிகரம் விளையாட்டுக்கழகம்.
10. ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
11. கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
12. மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.
13. கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை.
14. குருகுல முன்பள்ளி - ஜெயந்திநகர்.
15. சு. பசுபதிப்பிள்ளை (திருநகர், கிளிநொச்சி).
16. வேழமாலிகிதன் கௌரவ தவிசாளர்(கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி).
17. கௌரவ உறுப்பினர் ஜீவராசா கரைச்சி பிரதேச சபை .
18. Lion சுதன் ஆசிரியர் கணேசபுரம் வட்டாரம்.
19. ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய பிரதமகுரு, ஜெயந்திநகர்.
20. து.பிறேமச்சந்திரன் ஆனைக்கோட்டை (மருமகன்).
21. அருணாசலம் குடும்பம் ஜெயந்திநகர்.
22. ஜெயக்குமார் - கீதா குடும்பம் ஜெயந்திநகர்.
23. அன்பு றில்லர்ஸ்.
24. மேவின் குடும்பத்தினர், ஜெயந்திநகர்.
25. நிலா வெதுப்பகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. ஆசிரியர் நலன்புரிச் சங்கம் (கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்).

27. AIA Insurance Lanka Ltd.

28. ஆசிரியர் நலன்புரிச்சங்கம் (கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி).

29. விசேட கல்வி ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி).

30. கிரியின் நண்பர்கள்.

31. மருமகன் - சாந்தன் நண்பர்கள், வவுனியா.

32. ரீக்கடை பசங்க.

## விழிநீர் இரங்கல் [அஞ்சலி] பதிப்பித்து வெளியிட்டோர்

01. ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம், ஜெயந்திநகர்.

02. AIA காப்புறுதி நிறுவனம் கிளிநொச்சி கிளை.

03. கிருசாந்தனின் நண்பர்கள் (தர்சினி, அகல்யா, சகிதா).

04. கணேசலிங்கம் தர்மசீலன் (சுவீஸ்) (பெறாமகன்கள்)

05. பஞ்சலிங்கம், பவானி குடும்பத்தினர்.

## மலர்வளையம் சாற்றியோர்

01. இலங்கை செஞ்சிலுவை சங்கம் கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விழி நீர் அஞ்சலி
அமரர். சண்முகம் சந்திரசேகரம்
தோற்றம்
11.11.1952
மறைவு
08.10.2021
Kilinochchi Branch,
AIA Insurance Lanka Ltd


கண்ணீர் அஞ்சலி
(கணேசபுரம் வட்டாரத்தின் செயற்பாட்டாளர்)
அமரர்
சண்முகம் சந்திரசேகரம் (JP)
Lion சுதன் ஆசிரியர் கணேசபுரம் வட்டாரம்..


கண்ணீர் அஞ்சலி
எமது ஆலயத்தின் தலைவர்
அமரர்.
சண்முகம் சந்திரசேகரம்
1952.11.11













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிலும் பிறவி சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூரத்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




★ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஆணிவேராக விளங்கி, பண்பால் அன்பால் எமை வழிநடாத்தி, இப் பூமியிலே தலை நிமிர்ந்து நடக்க வைத்து, எம்மை விட்டு ***08.10.2021*** அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் மறைந்த செய்தி கேட்டு வருகை தந்து, எமது துன்பத்தில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அனைவர்க்கும் அஞ்சலியில் கலந்து கொண்டு உரையாற்றியவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும், நேரில் சமூகமளிக்கமுடியாத நிலையில் இரங்கல் செய்தி அனுப்பியோர்க்கும், தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியோர்க்கும், அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோர்க்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோர்க்கும், உணவுகள் தந்து உபசரித்தோர்களுக்கும், ஏனைய உதவிகள் புரிந்தோர்க்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றியை அன்புடன் தெரிவிக்கின்றோம்.


நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவள்ளுவர் புரட்சிக் கருத்துக்கள்

- உலகம் ஆதி பகவனை முதலாவதாக உடையது
- ஒழுக்கம் உயிரினும் மேலானது
- மழை பெய்யவில்லை என்றால் தானம், தவம் ஆகிய இரண்டு அறங்களும் நடைபெற மாட்டா
- அன்பின்றி உலகம் வாழாது
- இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பம்
- வாய்மையே சிறந்த அறம்
- ஈகை புகழ் தரும்
- இன்சொல் பேசுக
- சோம்பல் வேண்டாம்
- பொறாமை வேண்டாம்
- கோபம் (விடு) நீக்கு
- கற்க கசடு அற
- கற்ற அளவுக்கு மக்களுக்கு அறிவு வளரும்
- அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை
- ஒருவன் செய்யத்தக்கது நல்வினையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
வேழன் பதிப்பகம், கிளிநொச்சி .021 228 5579